நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...

# தோழர் இரத்தினசபாபதி

பி. ஏ. காதர்

## எனது பார்வையில் தோழர் இரத்தினசபாபதி

ஈழத்தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தின் திசைமார்க்கம் தொடர்பான தத்துவாரத்த பிரச்சினையில் ஆழமாகத் தனது தடத்தைப் பதித்த ஒரு மகத்தான புத்திஜீயின் மறைவை நன்றியுடன் நினைவு கூரும் இந்நிகழ்வில் எனது கருத்தையும் உணர்வையும் பகிர்ந்து கொள்கிறேன்.

தோழர் இரத்தினசபாபதி அவர்களை நான் முதன்முதலாக 1983ம் ஆண்டு அப்போது சென்னையில் இயங்கிய தமிழ்த் தகவல் நிலையத்தில் சந்தித்தேன். அதன்பின் அண்ணநகரிலும் வள்ளுவர் கோட்டத்திலும் நாம் இருவருதம் பல தடவைகள் சந்தித்து உரையாடிய ஒவ்வொரு நிமிடமும் இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. அக்காலகட்டத்தில் ஏனைய எந்தத் தமிழ் தலைவரிடமும் காணப்படாத இரண்டு அம்சங்களை நான் அவரிடம் கண்டேன்.



முதலாவதாக : யாழ்குடாநாட்டின் குறுகிய எல்லைக்குள் முடக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் விடுதலைச் சித்தாந்த வேலியை உடைத்து வன்னி - கிழக்கு மாகாணம் - மலையகம் - முஸ்லிம்கள் ஆகிய அனைத்துத் தமிழ்பேசும் மக்களையும் உள்ளடக்கியதாக அப்போராட்டம் அமையவேண்டும் என்ற கருத்தை விதைத்த முன்னோடித் தலைவர் என்ற பெருமை தோழர் இரத்தினசபாபதியையே சாரும். அதைவிடவும் அவர் வகித்த உன்னதமான பாத்திரம் ஒன்றுள்ளது. அதுதான் விடுதலைப்போராட்டத்தில் மலையகமக்கள் தொடர்பாக அவர் கொண்டிருந்த கண்ணோட்டம். அதுவரை மலையகத் தொழிலாளர்கள் மலிவான அந்நியக் கூலிகளாக மாத்திரமே பார்க்கப்பட்ட வேளையில் அவர்களைப் போராட்ட உணர்வுள்ள பாட்டாளிவர்க்கமாக சரியாக இனம் கண்டு விடுதலைப் பொராட்டத்தின் ஜீவநாடியாக அவர்கள் முன்னணிப் பாத்திரம் வகிக்க்கூடிய விதத்திலே அரசியல் அமைப்புப் பணிகளை விஸ்தரிக்க முயன்ற முதலாவது தலைவர் அவர்தான். இவரது இந்த இடதுசாரிப்பார்வை மிகவும் முற்போக்கானது. இவரது இந்த முற்போக்கான சிந்தனைதான் ஸ்ரீஇருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் என்ற பெயரில் மலையக மக்களின் வரலாறு முதல் தடவையாக வெளிவரக் காரணமாக இருந்தது

இரண்டாவதாக:

1983 வன்செயலின் பின்னர் எமது விடுதலைப் போராட்டம் தனது இயல்பான வளர்ச்சிக்கு அப்பால் வீக்கம் கண்டபோது பல்வேறு குழுக்கள் உதயமாகின. அவற்றிடையே பகைமை உணர்வே மேலோங்கி இருந்தத. அச்சமயத்தில் ஒவ்வொரு

அமைப்பின் காரியாலயத்திற்கும் மெய்க்காப்பாளர் துணையின்றி நிராயுதபாணியாகப் போய் கதவைத்தட்டி சகல தலைவருடனும் எந்த நேரத்திலும் கதைகக்கூடிய ஒரே ஒருவர் தோழர் இரத்தினசபாபதியாகத்தான் இருந்தார். அவர் சகலராலும் மதிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட ஒரே ஒரு மாமனிதனாகத் தகழ்ந்தார். அவர் சகல அமைப்புகளையும் இணைத்து பொதுவான ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க முயன்றார். பல்வேறு காரணங்களால் அவரது அந்த முயற்சி வெற்றிழ பெறவில்லை. அம்முயற்சி மட்டும் வெற்றி பெற்றிருந்தால் எமது போராட்டத்தின் பல பின்னடைவுகளும் அழிவுகளும் தவிர்க்கப்பட்டிருகக்ககூடும்.

இறுதியாக: தோழ்:ர் இரத்தினசபாபதி அவர்கள் தனது முற்போக்கக் கருத்துக்க செயல்வடிவம் கொடுக்க முயன்றார். ஆயினும் அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய வலுவான அமைப்பைக் கட்டியெழுப்ப அவரால் இயலாமற் போனமை எமது போராட்டத்தின் துரதிரஷ்டம். தலைமைப் பண்புகளுக்கு ஒவ்வாத சில பழக்க வழக்கங்கனளில் இருந்து தன்னை விடுவிலீத்துக் கொள்ளத் தவறியமை அவரது உடல் ஆரோக்கியத்தையும் ஆளுமையையும் பாதித்தது. அது எமது போராட்டத்திற்கு நேர்ந்த பெரும்துரதிர்ஷ்டமாகும். எனினும் அவர் எமது போராட்ட சித்தாந்தத்தின்மீது பாய்ச்:சிய முற்போக்குப் பார்வை அவரை நிரந்தரமாக நினைவு கூரும்.

நன்றி
பி. ஏ. காதர் (இலண்டன்)
இவர் இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் - ஆசிரியர்
மலையக மக்கள் முன்னணி முன்னாள் செயலாளர

---


## ஆயிரத்தோராவது வேதனையின் காலை

*பைசால் கவிதைகள்*




**முதற் பதிப்பு : செப். 2006**

ஏ. ஏ. பைசால்
பழைய தபாலக வீதி
பொத்துவில் 15
இலங்கை

வெளியீடு : மூன்றாவது மனிதன் வெளியீட்டகம்
617 அவிசாவெல றோட்
வெல்லம்பிட்டடிய
இலங்கை

## என்கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை!

*பெண்ணியா கவிதைகள்*




**முதற் பதிப்பு : ஒக். 2006**

நஜிபா றுாபி
11, அப்துல் ஜவாட்அலிம் மாவத்த
காத்தான்குடி 06
இலங்கை

வெளியீடு : ஊடறு (udaru@bluewin.ch)